Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate, Gingee
CC.No.249/2020

PW -3

Name - திரு,கௌரிசங்கர் (சிறப்பு உதவி ஆய்வாளர்)
Father Name -
Village -
Taluk -
Religion -
Age -

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 14.12.2021

முதல் விசாரணை

நான் தற்போது நல்லாண்பிள்ளைபெற்றாள் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2018 ம் வருடம் எங்கள் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றிய திரு. ஜெயராமன் என்பவரின், கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். மேற்படி உதவி ஆய்வாளர் ஜெயராமன் என்பவர் வேறு பணியில் உள்ளதாலும் நான் அவர் உடன் பணியாற்றுவதாலும் அவரின் கையொப்பம் நன்கு தெரியும் என்பதாலும், கோப்புகளின் அடிப்படையில் நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 09.11.2018 ம் தேதி நல்லாண்பிள்ளைபெற்றாள் காவல் நிலைய நிலையப்பொறுப்பில் உதவி ஆய்வாளர் ஜெயராமன் இருந்தபோது கீழ்பென்னாத்தூர் கிராமம், வேடி மகன் முருகன் என்பவர்திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் சிகி்சைடியில் இருக்கும் விவரம் கிடைக்கபெற்று அவரின் புகார் வாக்குமூலம் பதிவு செய்து அதன் அடிப்படையில் குற்ற எண்.264/2018 இ.த.ச பிரிவுகள் 147, 341, 294(பி), 323.324.506(2) கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா2 ஆகும். வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் திரு. ஜெயராமன் கடந்த 10.11.21018 ம் தேதி காலை 9.30 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் பிரபு, திருமலை ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவை முறையே அ.த.சா 3 மற்றும் 4 ஆகும். மேலும், இவ்வழக்கு சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். .தனது விசாரணையில் சம்பவம்

உண்மை என தெரிய வர இவ்வழக்கின் 1ம் எதிரியை கடந்த 10.11.2018 காலை 11.00 மணிக்கு மாதம்பூண்டி கிராமம் எதிரி பங்கு கடை முன்பு காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். மேலும், இவ்வழக்கின் மற்ற எதிரிகள் மாண்புமிகு அமர்வு நீதிமன்றத்தில் உத்தரவின் படி தக்க பிணையில் சென்றுள்ளனர். பின்னர், காயம்பட்ட நபரான முருகன் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரணை செய்து காயச்சான்றும் வாக்குமூலமும் பெற்றுள்ளர். அந்த காயச்சான்று அ.த.சா 5 ஆகும். பின்னர், உதவி ஆய்வாளர் திரு. ஜெயராமன் தனது விசாரணையை முடித்து எதிரிகளின் மீது இ.த.ச பிரிவுகள் 147, 341, 294(பி), 323, 324,506(2) கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

குறுக்கு விசாரணை

இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடம் செல்லதமல் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் அ.சா1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று அதன் அடிப்படையில் எதிரிகள் மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

Taken down before/me in Open
Court and read over/interpreted to
the witness and acknowledged by
him/her to be correct.
Judicial Magistrate, Gingee.